## ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் வென்று சாதனை!

# மகாராஜன் ஆறுமுகப் பாண்டியனுக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் — சமூக வலைதளப் பதிவு!

சென்னை,அக்.30-

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டி 2025-இல் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ள மகாராஜன் ஆறுமுகப் பாண்டியனைப் பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு;



**கோவில்பட்டி என்றால் இனிப்பு, ஹாக்கி மட்டுமல்ல, பளு தூக்குதலும் இனி நம் நினைவுக்கு வரும்படி,** Asian Youth Games 2025-**இல் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ள தம்பி மகாராஜன் ஆறுமுகப்பாண்டியன் அவர்களுக்கு என் பாராட்டுகள்!**

**முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையைத் திறந்து வைக்க, கோவில்பட்டிக்கு நான் வந்திருக்கும் வேளையில், இந்த இனிய செய்தியைப் பார்த்து இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறேன்.**

**உங்களின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கும், பயிற்சிக்கும் நமது திராவிட மாடல் அரசு துணைநிற்கும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.


வாட்ஸ் அப்பில் வலம் வருவது!





## 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் அறிவிப்பு

# தேர்தல் ஆணையம் பா.ஜ.க. கைப்பாவையாகக் கூடாது!

### கேரள முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!

திருவனந்தபுரம், அக். 30 -

12 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை (SIR) மேற்கொள்ளப் போவதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பது, ஜனநாயக நடைமுறைக்கு விடப்பட்டுள்ள சவால் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் கூறியுள்ளார். தேர்தல் ஆணையம், ஒன்றிய ஆளும் கட்சியின் கைப்பாவை அமைப்பாகக் கூடாது என்றும் அவர் கண்டித்துள்ளார்.

இதுகுறித்து பினராயி விஜயன் தமது முகநூல் பக்கத்தில் கூறியிருப்ப தாவது:

கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் வாக்காளர் பட்டியல்களில் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) செயல்படுத்தப் படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்திருப்பது ஜனநாயக செயல்முறைக்கு ஒரு சவாலாகும். "வாக்களிப்பதைப் போன்றது எதுவும் இல்லை, நான் நிச்சயமாக வாக்களிப்பேன்" ('Nothing Like Voting, I Vote For sure') என்பது 2024 ஆம் ஆண்டு வாக்காளர் தினத்தின் செய்தி.

அது நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டது. அதைப் பிரச்சாரம் செய்தவர் களே, பீகாரில் 65 லட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கினர். குடிமக்கள் பதிவேட்டை குறுக்குவழியில் புகுத்துவதா? அரசியலமைப்புச் சட்டத்தின் 326 ஆவது பிரிவின் கீழ் குடிமக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப் பட்டுள்ள உலகளாவிய வாக்களிக்கும் உரிமையை முழுமையாக மீறுவதாகும். ஒரு குடிமகனின் அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையை அரசியல் நலன்களின்படி பறிக்க முடியாது. எஸ்.ஐ.ஆர். செயல் முறை தேசிய குடிமக்கள் பதிவேட்டை குறுக்கு வழியாக செயல்படுத்தும் நோக்கம் கொண்டது என்ற கவலை இங்கு வலுவடைந்து வருகிறது. எஸ்.ஐ.ஆர். மூலம் தங்களுக்கு ஏற்ற வகையில் வாக்காளர் பட்டியலை புதுப்பிக்க ஒன்றிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்ற விமர்சனம் எந்த வகையிலும் மறுக்கப் படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.



**இவ்வளவு அவசரம் ஏன்?**

பீகார் எஸ்.ஐ.ஆர்.இன் அரசியலமைப்புச் சட்ட செல்லுபடித் தன்மை உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தாலும், அதே செயல்முறையை மற்ற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்துவதை குற்றமற்றதாகக் கருத முடியாது. நீண்டகாலத் தயாரிப்பும் ஆலோசனைகளும் தேவைப்படும் வாக்காளர் பட்டியலின் சிறப்பு மற்றும் தீவிரமான திருத்தப் பணியானது, மக்களின் விருப்பத்தைத் தகர்க்கும் விதத்தில் அவசரகதியில் மேற்கொள்ளப்படுகிறது என்பது தெளிவாகிறது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950, மற்றும் வாக்காளர் பதிவுச் சட்டம் 1960 ஆகியவற்றின் படி, தற்போதுள்ள பட்டியலின் அடிப்படையிலேயே வாக்காளர் பட்டியல்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

ஆனால், தற்போதுள்ள வாக்காளர் பட்டியல்களுக்குப் பதிலாக 2002-2004 பட்டியலை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீவிர திருத்தத்தை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது. கேரளத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் போது சிறப்பு தீவிர திருத்தம் சாத்தியமற்றது என்று மாநில தேர்தல் அதிகாரியே தெரிவித்திருந்தாலும், எஸ்.ஐ.ஆர். செயல்முறையை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்ற வலியுறுத்தல் தேர்தல் ஆணையத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**ஒன்றுபட்டுக் குரல் எழுப்புவோம்!**

தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பகத் தன்மையையே பாதிக்கும் இத்தகைய முடிவுகளில் இருந்து ஆணையம் விலக வேண்டும். தேர்தல் ஆணையம் போன்ற நிறு வனங்கள் ஒன்றியத்தில் ஆளும் கட்சி யின் கைப்பாவைகளாக மாற அனுமதிக்கக்கூடாது. எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய ஒரே மாநிலம் கேரளம். ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஆர்வமுள்ள அனைவரும் எஸ்.ஐ.ஆர். செயல்முறையின் இரண்டாம் கட்டத்திற்கு எதிராக ஒன்றுபட்டு குரல் எழுப்ப வேண்டும். இவ்வாறு கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

## ஆளுங்கட்சியான பா,ஜ.க.வின்

# தீய சதித்திட்டத்துடன் செயல்படும் தேர்தல் ஆணையம்!

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி கடும் விமர்சனம்!

திருவனந்தபுரம், அக்.30 -

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான, இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு, அதன் செயல்பாடுகள் மீதான சந்தேகத்தை வலுப்படுத்துவதாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. பேபி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர், தமது சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்ப தாவது:

ஜனநாயக நடைமுறைகளுக்கு அப்பட்டமான அவமதிப்பு "12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தேர்தல் ஆணையம் தன்னிச்சையாகவும் ஒருதலைப்பட்சமாகவும் சிறப்பு தீவிர திருத்தத்தை (SIR) அறிவித்திருப்பது மிகவும் ஆட்சேபனைக் குரியது. பீகாரில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உச்சநீதி மன்றம் விசாரித்து வரும்நிலையில், தேர்தல் ஆணையம் மேலும் பல மாநிலங்களில் அவசரமாக இந்தத் திருத்தத்தை மேற்கொள்வது, ஜனநாயக நடைமுறைகளை அவர்கள் அப்பட்டமாக அவ மதிப்பதையே காட்டுகிறது.



உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாநில சட்ட மன்றத் தேர்தல்கள் நடைபெறும் நிலையில், வாக்காளர் சிறப்பு தீவிர நடவடிக்கையை மேற்கொள்வதற்கு எதிரான ஒரு தீர்மானத்தை கேரள சட்ட மன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது. அதேபோல, வாக்காளர் சரிபார்ப்பு முகாம்கள் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். ஆனால், அனைத்தையும் தேர்தல் ஆணையம் புறக்கணித்த விதம், ஆளும் கட்சியின் கட்டளைப் படியும், தங்களுக்கு சாதகமாக வாக்காளர் பட்டியல்களை திருத்தம் செய்யும் ஆளும் கட்சியின் தீய சதித்திட்டத்தின் படியும் தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என்ற சந்தேகத்தை உறுதிப் படுத்துவதாக அமைந்துள்ளன."

இவ்வாறு எம்.ஏ. பேபி தெரிவித்துள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் — அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், அக். 30 -

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி செயற்குழுக் கூட்டம் (சி. வெ.கணேசன்) எனது தலைமையில், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர், தாட்கோத் தலைவர் தா.இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் இன்று (30.10.2025 - வியாழக்கிழமை) மாலை 4.30 மணியளவில், நெய்வேலி, தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட இளைஞர் அணி செயற்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ளசி.வெ.கணேசன் தெரிவித்துள்ளார்.

## குறுவை நெற்பயிருக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீட்டுத் தொகையை முன்னதாக வழங்கிடல்!

# நடப்பு சம்பா பருவ நெற்பயிரை - நவ. 15-க்குள் காப்பீடு செய்தல்!

### வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

**சென்னை, அக்.30-**

**2025-ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட குறுவை நெற்பயிருக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீட்டுத் தொகையை முன்னதாக வழங்கவும், நடப்பு சம்பா பருவ நெற்பயிரை நவம்பர் 15-ஆம் தேதிக்குள் காப்பீடு செய்வது குறித்தும், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் 28.10.2025 அன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து பல்வேறு மாவட்டங்களில் பெய்துவரும் கனமழையினால் அறுவடை பருவத்திலுள்ள குறுவை நெற்பயிர் பாதிப்படைந்துள்ளது. பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட குறுவை நெற்பயிருக்கான இழப்பீட்டுத் தொகையை முன்னதாக வழங்க காப்பீட்டு நிறுவனங்களை வலியுறுத்தியும், விவசாயிகள் இயற்கை பேரிடரினால் ஏற்படும் பொருளாதார இழப்பிலிருந்து பாதுகாக்கவும் நடப்பு சம்பா பருவ நெற்பயிரை விவசாயிகள் நவம்பர் 15ம் தேதிக்குள் காப்பீடு செய்வது குறித்தும் நேற்று (28.10.2025) தலைமைச் செயலகத்தில்



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், குறுவை நெற்பயிரில், மகசூல் இழப்பு கணக்கிட 18,520 பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு, இதுவரை 13,140 பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன என்றும், மீதமுள்ள 5,380 பரிசோதனைகளை விரைவில் முடிக்க வேண்டும் என்றும், பயிர் அறுவடை பரிசோதனைகள் முழுவதுமாக முடித்து, அறிவிக்கை செய்யப்பட்ட தகுதி வாய்ந்த கிரமங்களுக்கு, வழக்கமாக 2026 ஜனவரி மாதத்தில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை 2025 டிசம்பர் மாதம் முதல் விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் நேரடியாக வரவு வைக்க வேண்டும் என்றும், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்களை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிவுறுத்தினார்.

தற்போது, அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் சம்பா நெற்பயிரை முழு வீச்சில் சாகுபடி செய்து வருகின்றனர். இதுவரை 16.16 இலட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை குறைவான விவசாயிகளே பயிர் காப்பீடு செய்துள்ளதால் விரைவாக காப்பீடு செய்வதற்கு துரித நடவடிக்கை துறையால் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது நிலவிவரும் வானிலை மாற்றங்களினால் பூச்சி நோய் தாக்குதல், வெள்ளச் சேதம் போன்ற இடர்பாடுகளால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள, சம்பா நெற்பயிரை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி வரை காத்திராமல், விவசாயிகள் உடனடியாக பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என்றும், குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயி கள் 2025, அக்டோபர் 31-ஆம் தேதிக்குள்ளும், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடு துறை, திருவாரூர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், சேலம், திருப்பூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தேனி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சிவகங்கை, கடலூர், திருவள்ளூர் மற்றும் ஈரோடு ஆகிய 27 மாவட்டங்களைச் சார்ந்த விவசாயி கள் 2025 நவம்பர் 15-ஆம் தேதிக்குள்ளும், கன்னியாகுமரி, திண்டுக்கல், விருதுநகர், நாமக்கல், திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 6 மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் 2025 டிசம்பர் 15-ஆம் தேதிக்குள்ளும் சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்ய வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மேலும், துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர் மூலம் விவசாயிகளுக்கு சம்பா நெற்பயிரைக் காப்பீடு செய்வது குறித்து ஊடகங்கள் வாயிலாக அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், கடன் பெறா விவசாயிகள் பொது சேவை மையங்கள் மற்றும் தேசிய பயிர்க்காப்பீட்டு இணையதளத்தில் உள்ள "விவசாயிகள் கார்னரில்" நேரிடையாகவோ காப்பீடு செய்து இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ.தட்சிணாமூர்த்தி, பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர் திருமதி. ஆர்.ஜெயா, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் மற்றும் டெல்டா மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் (காணொலியில்) கலந்து கொண்டனர்.